நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

C.C. No. 228/2021

வழக்கு சாட்சி - **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பாக்கியராஜ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மகாலிங்கம் | : | தொழில் | வெல்டர் |
| கிராமம் | சுக்காம்பார் | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 34/2023 |

( எதிரி ஆஜர். )

**நாள் : 13.04.2023**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சுக்காம்பார் ஊரில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. முதவாது கையெழுத்து சப்பாணி என்பவருடையதாகும். 20.12.2018 அன்று காலை 09.00 மணியளவில் நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது, தோகூர் காவல்நிலையத்தினை சேர்ந்தவர்கள் விபத்தில் இறந்துபோனது தொடர்பாக ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள். அதில் நானும், பாக்கியராஜ் இருவரும் கையெழுத்து செய்தோம். என்னை தோகூர் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** - நான் கையெழுத்துபோட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் பக்கத்தில் இருக்கும் இடங்கள் குறித்து எழுதப்பட்டிருந்தது. ரோட்டில் இரத்தகறைகள் இருந்தது குறித்தும் எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். போலிசார் படம் வரைந்தபோது நானும், எனது நண்பரும் அங்கு சென்றோம், பொதுமக்கள் வேறு யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். நான் மேற்படி கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் செய்தேன் என்றாலும், இறந்துபோனவர் எனது ஊர்க்காரர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்க இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

ஒம்/-து.ஹரிராம்,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.